ஹட்டன் திக்ஓய நகர சபை - 2020

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஹட்டன் திக்ஓய நகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த வருமானச் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபை சட்டத்தின் (255 அதிகாரம்) 181(I) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஹட்டன் திக்ஓய நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.
என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நகர சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் -சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் இந்த அறிக்கையின் 1.6.1(அ) பந்தியின் அவதானிப்பு தவிர முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டிற்குரிய நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது அறிக்கையில் சுட்டிக் காண்பித்த ரூபா 10,928,153 ஆன கணக்கீட்டுக் குறைபாடுகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் கணக்குகளில் சீராக்குவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | கணக்குகளில் தேவையான சீராக்கங்களை மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட தொங்கல் கணக்கில் ரூபா 2,202,806 ஆன மீதி ஐந்தொகை பதிவுகளில் ஆரம்ப மீதியாக காண்பிக்கப்படவில்லை. | ஆண்டின் ஆரம்பத்தில் ஆம்ப மீதிகள் அனைத்தும் உரிய பேரேடுகளில் ஆரம்ப மீதிகளாக பதிவு செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | ஆம்ப மீதிகள் அனைத்தும் சரியாக பதிவு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2017 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதும் கொள்வனவு செய்யப்படாத பொருட்களுக்காக கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்ட ரூபா 2,628,650 ஆன 04 மீதிகளுக்காக கணக்குகளில் சீராக்கம் செய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 கடன்கொடுத்தோர் பதிவேட்டிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக | கணக்குகளில் தேவையான சீராக்கங்களை மேற்கொள்ள வேண்டும். |

### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 02 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி ரூபா 5,095,189 மற்றும் அட்டவணைகள் / அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி ரூபா 4,962,777 ஆக இருந்தமையால் ரூபா 132,412 ஆன வேறுபாடு ஒன்று இருந்தது. | அட்டவணைகளில் பதிவு செய்தல் சில தவிர்க்கப்பட்டமையால் இந்நிலைமை ஏற்பட்டதாகவும் எதிர்காலத்தில் சீராக்குவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்கள் மற்றும் அண்மித்த அறிக்கைகள் ஒப்பிடப்பட்டு தேவையான சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட மொத்தம் ரூபா 7,337,302 ஆன 02 கணக்கு விடயங்களுக்குரிய தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | நிலையான சொத்துக்கள் மற்றும் பொது களஞ்சிய பதிவேடு நாளது வரையாக்கப்பட்டதன் பின்னர் இதற்காக அட்டவணைகள் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் |

## 1.7 இணங்காமைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணக்கமின்மை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | | |
| நிதிப்பிரமாணம் 371(5) | செயற்பாடு நிறைவு பெற்றவுடன் முற்பணம் தீர்வு செய்யப்பட வேண்டிய போதிலும் 1987 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் இருந்து வரும் மொத்தம் ரூபா 507,868 ஆன முற்பணங்கள் 2021 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரை தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | தாமதமின்றி தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 38,190,887 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 40,374,088 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **வீதவரியும் வரியும்** | | |
| | 2020 சனவரி 01 ஆந் திகதி நிலுவை வீத வரி ரூபா 9,154,702 ஆக இருந்த போதும் ஆண்டில் ரூபா 1,195,948 ஆக இருந்தது. அதன் பிரகாரம் வருமான பரிசோதக உத்தியோகத்தர் களின் கடமைகள் முறையாக நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை | அறவடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நகர சபை விதிகளின் பிரகாரம் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(ஆ) வாடகை**

| | | |
|---|---|---|
| ரூபா 1,581,710 ஆன வாடி வீட்டு வாடகையில் எவ்வித தொகையொன்றும் 2021 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | கடிதமொன்று அனுப்பிவைக்கப்பட்டு அத்தொகையை கொடுப்பனவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. | நகர சபை விதிகளின் பிரகாரம் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(இ) முத்திரைக் கட்டணம்**

| | | |
|---|---|---|
| மாகாண சபையின் தலைமை செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு அறவிடப்பட வேண்டிய் முத்திரைக் கட்டணம் ரூபா 15,000,000 ஆன முத்திரைக் கட்டணத்தில் ரூபா 5,694,900 தொகை 2021 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரை கிடைத்திருந்த போதும் ரூபா 9,305,100 தொகை மேலும் அறவிடப்பட வேண்டியதாக இருந்தது. | நிலுவையாக இருக்கும் தொகையை பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | முத்திரைக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

நகர சபைகள் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| i. | 2005 ஆம் ஆண்டின் போது சபையினால் நிர்மாணிக்கப்பட்டு பேணிச் செல்லப்படும் திக்ஓய ஆயுர்வேத மருந்தகத்தின் சிகிச்சை செயற்பாடுகள் நிறுத்தப்பட்டிருந்ததுடன் எவ்வித சபை அங்கீகாரமின்றி அதில் கிராம சேவையாளர் அலுவலகமொன்று நடாத்திச் செல்லப்பட்டிருந்தது. அதன் காரணமாக அப்பிரதேசத்தில் நோயாளர் சிகிச்சை சேவை நிறுத்தப்பட்டிருந்தது. | 2021 ஒக்தோபர் 31 ஆந் திகதி அளவில் ஆயுர்வேத மருந்தகத்தை மீண்டும் பொறுப்பேற்று திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் எதிர்காலத்தில் நோயாளர் சிகிச்சைகளில் ஈடுபடுத்துவதற்காக எதிர்பார்ப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சேவைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| ii. | 2020 ஆம் ஆண்டில் சபையால் 15 அத்துமீறிய நிர்மாணங்கள் இனங்காணப்பட்டிருந்தது. அதில் 02 இற்கு மாத்திரம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் வழக்கு தொடரப்பட்டிருந்தது. எஞ்சிய நிர்மாணங்களுக்காக கணக்காய்வு திகதி வரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப் பட்டிருக்கவில்லை. | அங்கீகரிக்க முடியாத நிர்மாணங்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | அத்துமீறிய நிர்மாணங்கள் தொடர்பாக பொருத்தமான நடைமுறைகள் தாமதமின்றி எடுக்கப்பட வேண்டும். |
| iii | 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் இருந்து வரும் ரூபா 3,747,430 கூட்த்தொகையான 33 கடன் மீதிகளை தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | செலுத்த வேண்டிய கட்டணங்களை கொடுப்பனவு செய்வதற்கும் புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கும் உள்ளவற்றை உறுதிப்படுத்தி பதிவழிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | கடன் மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| IV | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 08 ஆண்டு முதல் 12 ஆண்டுகள் வரையான காலப்பகுதியொன்று கடந்திருந்த போதும் 03 அரச நிறுவனங்களிடமிருந்து பெற வேண்டிய மொத்தம் ரூபா 9,985,139 ஆன 03 கணக்கு மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | அறவிடுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| V | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 ஆண்டு முதல் 09 ஆண்டுகள் வரையான காலப்பகுதியொன்று கடந்திருந்த ரூபா 4,416,577 ஆன செலுத்த வேண்டிய 02 கணக்கு மீதிகள் தீர்வுசெய்யப்பட்டிருக்கவில்லை. | நிறைவேற்றப்பட்ட நிர்மாண வேலை செலவினம் பூர்த்தி செய்ய உடன் கொடுப்பனவு செய்து பூர்த்தி செயவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நகர சபை காணிகளை நீண்ட கால குத்தகைக்கு வழங்கும் போது 84 சந்தர்ப்பங்களில் நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 36(உ)(II) பிரிவின் பிரகாரம் அமைச்சரின் அங்கீகாரம் பெறப்படவில்லை. | தற்போது இவ்வாறான வகையில் நடவடிக்கைகள் முறையான நடைமுறையொன்று மேற்கொள்ளப்படுவதாக அறவிக்கப்பட்டிருந்தது. | நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| I | 2015 ஆம் ஆண்டின் போது மத்திய மாகாண வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சாரம் மற்றும் எரிசக்தி மற்றும் வீடமைப்பு நிர்மாண அமைச்சின் நிதிஏற்பாடுகளில் ரூபா 1,964,375 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்ட உயிரியல் வாயு உற்பத்தி செயற்திட்டம் முறையான ஆய்வொன்று மேற்கொள்ளாமல் நிர்மாணிக்கப்பட்ட காரணத்தினால் பிரிவு செயற்படும் நிலையில் காணப்படாமையினால் கைவிடப்பட்டிருந்தது. | பின்னர் பதில் அளிப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சொத்துக்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டும். |
| II | வருடாந்தம் கேள்வி மீது குத்தகைக்கு வழங்க இருந்த டன்பார் விளையாட்டரங்கிற்கு அண்மித்த உடற்பயிற்சி நிலையம் மீளாய்வாண்டின் போது குத்தகைக்கு வழங்காமையால் விளைவற்றுக் காணப்பட்டது. | கேள்வி கோரிய போதும் அதற்காக கூறுவிலை சமர்ப்பிக்கப்படவில்லை யென அறிவிக்கப்பட்டிருந்தது. | சொத்துக்கள் ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | நீண்டகாலமாக இருந்து வரும் ஹட்டன் திக்ஓயா நகர சபையின் களஞ்சியத்தினுள் “E - Net piyasa” நிலையத்தின் ரூபா 1,000,000 இற்கு மேற்பட்ட பெறுமதியுடைய 28 பொருள் உருப்படிகள் 05 முதல் 14 ஆண்டு காலமாக விளைவற்றும் பயன்படுத்தாமலும் காணப்பட்டன. | செயின் லின்க் ரோல் தேவையான போது பயன்பாட்டிற்கு வழங்கப்படும் கணனிகள் அலுவலக பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ளதாக வும் எஞ்சியிருக்கும் பொருட்களை கோரும் சந்தர்ப்பத்தில் வழங்குவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சொத்துக்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டும். |

## 3.4 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஹிஜ்ராபுர இர்பாம் வீட்டின் அருகே படிக்கட்டுகளை அபிவிருத்தி செய்வதற்காக விவசாய அமைப்பொன்றுடன் ரூபா 250,661 தொகைக்கு 2020 பெப்ரவரி 24 ஆந் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் நிறை வேற்றப்பட்ட வேலைகளின் பெறுமதி ரூபா 154,741 ஆக இருந்தது. இதன் போது படிக்கட்டுகளை கொங்கிரீட் தடிப்பு 200mm அல்லது 150 mm எனக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் | காணப்படும் அதிக வேலைப்பளு வேலையில் நிர்மாண வேலைகள் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் முழு மேறபார்வையுடன் மேற்கொள்ள முடிய வில்லை எனவும் பணத்தை கழித்து கொடுப்பனவு செய்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | விரைவில் மதிப்பீட்டின் பிரகாரம் நிர்மாண வேலையை பூர்த்தி செய்ய வேண்டும். |

| | | |
|---|---|---|
| கணக்காய்வுப் பரிசோதனையின் போது தடிப்பு 31mm மற்றும் 60 mm அளவில் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டன.இதன் பிரகாரம் படிக்கற்களின் உறுதித்தனமை சிக்கலான ஒன்றாக இருப்பதால் கொடுப்பனவு செய்த ரூபா 88,606 தொகையும் விளைவற்ற செலவினமாக இருந்தது | | |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 சுற்றாடல் சிக்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) சுற்றாடல் முகாமைத்துவம்** | | |
| அனுமதிப்பத்திரங்கள் புதுப்பிக்கப்பட்ட 22 வியாபாரங்களின் செல்லுபடிக் காலத்தை மிகைத்து 08 மாதங்கள் முதல் 10 ஆண்டுகள் வரையான காலம் கடந்திருந்தன. | தேவையான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது, | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(ஆ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்** | | |
| I சபையால் கழிவுப் பொருள் முகாமைத்துவம் தொடர்பாக முறையான வேலைத் திட்டமொன்று மற்றும் நீண்டகால வேலைத் திட்டமொன்று / குறுங்கால வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | எதிர்காலத்தில் இச்செயற்பாட்டை முறைப்படுத்துவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | முறையான வேலைத் திட்டமொன்று ஈடுபடுத்தப்பட வேண்டும் |
| II ஹட்டன் நகரில் நீர் மூலாதாரங்களின் ஆரம்ப இடங்கள் காணப்படும் பிரதேசமொன்றாக இருப்பதுடன் அந்நீர் மூலாதாரங்களின் தொடக்கத்திலேயே கழிவுப் பொருட்கள் வெளியேற்றப்பட்டுள்ள இடங்கள் வெளிக்கள பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் நீரைப் பயன்படுத்தும் பொதுமக்களுக்கு அசுத்தமான நீர் வழங்கல் இடம்பெற்றிருந்தது. | முறையற்ற கழிவுப்பொருட்களை வெளியேற்றும் பொது மக்களுக்கு உரிய சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நகர சபை உத்தியோகத்தர்கள் பொறுப்புடன் தமது கடமைகளை நிறைவேற்ற வேண்டும். |